செ.வெ.எண்: 676 18.8.08

# செய்திக் குறிப்பு

பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண் பட்டதாரி, முதுகலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலை பட்டதாரிகள் போன்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்பிற்காக சென்னை, சாந்தோம், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சென்னைக்கு நேரில் வந்து கொண்டு இருக்கின்றனர். இதனால், வீண் காலவிரயம் மற்றும் பொருட்செலவு ஏற்படுகிறது. அலுவலகத்தில் தேவையற்ற கூட்ட நெரிசல் ஏற்படுகின்றது. இதனை தவிர்க்க, மேற்படி கல்வித் தகுதி உடைய மனுதாரர்கள் அந்தந்த உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புதியதாக (FRESH REGISTRATION) பதிவு செய்து கொள்ள விண்ணப்பிக்கலாம். பதிவு ஆவணங்களை அந்தந்த உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்கள், சென்னையிலுள்ள தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும். மேற்படி பதிவு விவரங்கள் சென்னையில் உடனுக்குடன் கணினியில் பதிவு செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு உரிய வேலைவாய்ப்பு பதிவட்டை காலதாமதமின்றி அஞ்சலில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எந்த மாவட்டத்தில் பதிவு செய்தாலும், சீனியாரிட்டி பாதிக்கப்படமாட்டாது. மனுதாரர்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவிற்கான பதிவு ஆவணங்களை எந்தத் தேதியில் அளிக்கின்றனரோ, அந்தத் தேதியிலிருந்து பதிவு மூப்பு அளிக்கப்படும். பதிவிற்கான படிவம் அந்தந்த உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கிடைக்கும்.

**கூடுதல் கல்வித் தகுதியை பதிவு செய்வது (ENTERING ADDITIONAL EDUCATIONAL QUALIFICATIONS):**

ஏற்கனவே, சென்னை, சாந்தோம், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பெயரினைப் பதிவு செய்து கொண்டவர்கள், தற்போது கூடுதலாக கல்வித் தகுதி பெற்றிருப்பின் அக்கல்வித் தகுதிக்கான சான்றின் புகைப்பட நகல் (Xerox copy of consolidated mark statement issued by the University alongwith course completion certificate issued by concerned Educational Institution or Provisional Certificate issued by the concerned Universities), ஏற்கனவே மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்ததற்கான அடையாள அட்டையின் நகல் (Xerox copy of Employment Card), இணைத்து வெள்ளைத் தாளில் பதிவு அஞ்சலில் விண்ணப்பிக்குமாறு தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலக தொடர்புடைய பதிவுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பதிவஞ்சலில் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதும், அவர்களின் கூடுதல் கல்வித் தகுதி கணினியின் மூலம் பதிவு செய்யப்பட்டு புதியதொரு வேலைவாய்ப்பு அடையாள அட்டை (Revised Employment Card duly entering the additional qualification) அஞ்சலில் மனுதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**பதிவு புதுப்பித்தல் (RENEWAL)**

புதுப்பித்தலுக்கான கெடு மாதம் மற்றும் அதற்கு அடுத்து வரும் இரண்டு சலுகை மாதங்களுக்குள் மனுதாரர்கள் பதிவினை இணையதளத்தின் மூலம் புதுப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறு புதுப்பித்துக் கொள்ளும் பொழுது இணைய தளம் வாயிலாக அடுத்து வரும் புதுப்பித்தல் தேதியுடன் கூடிய கணினி அச்சுப் பிரதி கிடைக்கப் பெறும். இதற்கான இணையதள முகவரி www.employment.tn.gov.in ஆகும். கெடு தேதியில் புதுப்பிக்கத் தவறிய மனுதாரர்கள் தங்களது கோரிக்கையைப் பதிவஞ்சலில் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம்
55, சாந்தோம் நெடுஞ்சாலை
சாந்தோம், சென்னை-4

ஆணையர் 18/08/08
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
சென்னை-32

நாள் : 18/08/2008